SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல்,
சர்வோ ஆயில்
சில்லறை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் சித்திரை 21 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 துல்கதா 5

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை,
திருமண மற்றும்
சுபவிசேஷங்களுக்கு அனைத்து
விதமான மாடல்களிலும்
சிறந்த முறையில் பைகள்
தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

/maalaiexpressnews

● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, மே 4, 2025 ● வெளியூர்: 5-5-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 288 ● 8 பக்கம் ● ரூ.6

## காரைக்கால் அம்மையார் கோவில் கும்பாபிஷேகம்





புதுவை மாநிலம் காரைக்காலில் உள்ள புகழ்பெற்ற அம்மையார் கோவில், சோமநாதர் கோவில் மற்றும் அய்யனார் கோவில்களில் நேற்று மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் காரைக்கால் மற்றும் சுற்றுப்புற கிராம பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## தமிழ் வார விழா: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை பங்கேற்பு



**சென்னை, மே 4–**

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாள் 'தமிழ் வார விழா' நிறைவு விழா முதல் –அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நாளை (திங்கள் கிழமை கலைவாணர் அரங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் –அமைச்சரால் கடந்த மாதம் 22.4.2025 அன்று சட்டமன்றத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், 'பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்' எனவும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

தமிழ் வளர்ச்சித்துறை, செய்தித்துறை, கலை பண்பாட்டுத்துறை என பல்வேறு அரசு துறைகள் இணைந்து இத்திட்டத்தினை 29.4.2025 முதல் 5.5.2025 வரை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கவியரங்கங்கள், இலக்கிய கருத்தரங்குகள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ் வார விழாவின் நிறைவு விழா நாளை (5.5.2025) அன்று காலை 10.30 மணியளவில் சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த விழாவில் அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்த விழாவில் தமிழ் வளர்ச்சித்துறையின் வாயிலாக 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியதன் தொடர்பாக அவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் விழா பேருரையாற்ற உள்ளார்.

## பயம் என்பது தி.மு.க. அகராதியிலேயே கிடையாது: வைகோ பேட்டி

**சென்னை, மே 4–**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோயம்புத்தூரில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஜம்மு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் 26 பொதுமக்கள் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் வேதனை அளிக்கிறது. அதே நேரத்தில், முஸ்லிம் இளைஞர்கள் சிலர் துணிச்சலுடன் செயல்பட்டு, மீதமுள்ள மக்களைப் பாதுகாப்பாக மீட்டெடுத்த செய்தி மனதுக்கு ஆறுதல் அளிக்கிறது. இந்தச் செய்தி ஊடகங்களில் விரிவாக வெளியிடப்படவில்லை. மத்திய அமைச்சரவையில் உள்ள சிலர் போர் தொடுக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால், போர் என்பது எளிதான விஷயம் அல்ல. போர் மூண்டால், இரு தரப்பிலும் அப்பாவி மக்கள் பெருமளவில் உயிரிழக்க நேரிடும். பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்படும். போரை ஆதரிப்பவர்கள் அதன் விளைவுகளைப் பற்றி யோசிக்க வேண்டும். நீட் வாக்குறுதியை நிறைவேற்ற தி.மு.க அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தி.மு.க.வின் 4 ஆண்டுகால ஆட்சியில் பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. பயம் என்பது தி.மு.க. அகராதியிலேயே கிடையாது. அமலாக்கத்துறை வருமான வரித்துறை, போன்ற அமைப்புகள் மத்திய அரசால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், அந்த அமைப்புகளின் மீது மக்களுக்கு நம்பிக்கையே போய்விட்டது. தி.மு.க.வில் யாரும் இதைப்பற்றி அஞ்சவும் இல்லை. கவலைப்படவும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## நாடு முழுவதும்

# மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு இன்று நடக்கிறது

## 22 லட்சம் பேர் பங்கேற்பு

**சென்னை, மே 4–**

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். படிப்புகள் மற்றும் சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு தேசிய தகுதிகாண் மற்றும் நுழைவுத் தேர்வு (நீட்) ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. இந்த தேர்வில் மாணவமாணவிகள் பெறும் மதிப்பெண் அடிப்படையிலேயே மேற்சொன்ன படிப்புகளில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. அதேபோல், ராணுவ நர்சிங் கல்லூரிகளில் பி.எஸ்சி. நர்சிங் படிப்புக்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்.டி.ஏ.) நடத்துகிறது.

அதன்படி 2025–26ம் கல்வியாண்டு சேர்க்கைக்கான 'நீட்' தேர்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 2 மணி முதல் 5.20 மணி வரை நேரடி முறையில் (பேப்பர்பேனா) நடைபெறவுள்ளது. இந்த தேர்வில் நாடு முழுவதும் சுமார் 22 லட்சம் பேர் பங்கேற்க உள்ளனர். தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி உள்பட 31 மாவட்டங்களில் தேர்வு நடைபெறுகிறது. இந்த முறை தமிழ்நாட்டில் 1 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை எழுத இருக்கின்றனர். சென்னையில் மட்டும் 44 மையங்களில் 21,960 பேர் தேர்வு எழுதுகின்றனர்.



நீட் தேர்வு தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் மொத்தம் 720 மதிப்பெண்ணுக்கு நடத்தப்படும். தேர்வு மையத்தில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தேர்வுக்கான நுழைவுச்சீட்டில் (ஹால்டிக்கெட்டில்) தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தவகையில் தேர்வு மையத்துக்குள் காலை 11.30 மணி முதல் மாணவர்களுக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். பிற்பகல் 1.30 மணிக்குள் வந்துவிட வேண்டும். அதன்பின் வருபவருக்கு எக்காரணம் கொண்டும் அனுமதி தரப்படாது என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுதவிர தேர்வுக்கு ஹால்டிக்கெட் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையை கட்டாயம் கொண்டுவர வேண்டும். தேர்வர்கள் தங்கள் கையில் வெளிப்படையான தண்ணீர் பாட்டில் கொண்டு செல்லலாம். மேலும், ஹால்டிக்கெட்டில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து, தேர்வு முடிந்ததும் அறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையெனில் அந்த மாணவரின் விடைத்தாள் திருத்தப்படாது.

வழக்கம்போல் தேர்வறையில் செல்போன், வாட்ச் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் கொண்டுச்செல்ல அனுமதியில்லை. முழுக்கை சட்டை, பெல்ட், தோடு, மூக்குத்தி ஆகியவை அணியக்கூடாது உள்ளிட்ட இதர வழிமுறைகளையும் மாணவ, மாணவிகள் தவறாது பின்பற்ற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

# ஏழை, எளிய மக்களுக்கு அங்கீகாரம் கிடைக்க இலவச வீட்டுமனை பட்டா வழங்கிய முதல்வர்

## தூத்துக்குடி மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



தூத்துக்குடி, மே 4–

சமூகத்தில் ஏழ்மை நிலையில் உள்ள அனைத்து மக்களையும் பாதுகாக்கும் நோக்கில், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அவர்களுக்கு இந்த அரசு பக்கபலமாக இருக்க வேண்டும், அவர்களின் துயரை துடைக்க வேண்டும் என்றும், ஏழைகளின் சிரிப்பில் இறைவனை காண வேண்டும் என்று சொல்லக்கூடிய பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் வழியில் நடக்கக்கூடிய இந்த அரசு இன்றைக்கு சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கான அரசாக இந்த அரசை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிநடத்தி கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில், சமூகத்தில் வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதி பெறுவதற்காக இலவச வீட்டுமனைப் பட்டா அல்லது வீடு வழங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு வருவாய் நிலை ஆணை எண். 21 இன் கீழ் கிராம நத்தத்தில் காலியாகவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் தகுதியுடைய, வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

பெண்கள் நலனை உறுதி செய்யும் வகையில் இலவச வீட்டுமனை ஒப்படை குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஊரகப் பகுதியில் மூன்று சென்ட் நிலமும், நகர்ப்புற பகுதியில் இரண்டு சென்ட் நிலமும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு சென்ட் நிலமும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படியும், இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. மேலும், மாநகர, நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியுடைய காலியாகவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி 5 வருடத்திற்கு மேல் குடியிருந்து வரும் நபர்களுக்கு சிறப்புத் திட்டத்தின்கீழ் வரன்முறைபடுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற நாளான 07.05.2021 முதல் 25.04.2025 வரை 16014 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் விளிம்பு நிலையில் உள்ள இருளர்கள், நரிக்குறவர்கள் ஆகியவர்களுக்கு உரிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் பொருட்டு முதலமைச்சர் நேரடிய பார்வையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 10 வட்டங்களில், அதாவது, தூத்துக்குடி வட்டத்தில் 244 பயனாளிகளுக்கு ரூ.75,80,350 மதிப்பிலும், திருச்செந்தூர் வட்டத்தில் 1434 பயனாளிகளுக்கு ரூ.7,77,07,739 மதிப்பிலும், திருவைகுண்டம் வட்டத்தில் 130 பயனாளிகளுக்கு ரூ.40,33,600 மதிப்பிலும், சாத்தான்குளம் வட்டத்தில் 105 பயனாளிகளுக்கு ரூ.5,11,89,696 மதிப்பிலும், ஏரல் வட்டத்தில் 193 பயனாளிகளுக்கு ரூ.88,03,260 மதிப்பிலும், விளாத்திகுளம் வட்டத்தில் 8492 பயனாளிகளுக்கு ரூ.15,36,48,009 மதிப்பிலும், ஓட்டப்பிடாரம் வட்டத்தில் 1411 பயனாளிகளுக்கு ரூ.5,81,332 மதிப்பிலும், கோவில்பட்டி வட்டத்தில் 1712 பயனாளிகளுக்கு ரூ.11,60,25,619 மதிப்பிலும், எட்டயபுரம் வட்டத்தில் 443 பயனாளிகளுக்கு ரூ. 1,91,37,60 மதிப்பிலும், கயத்தார் வட்டத்தில் 1850 பயனாளிகளுக்கு ரூ.5,98,49,956 மதிப்பிலும் என மொத்தம் 10 வட்டத்தில் 16014 பயனாளிகளுக்கு ரூ.47,94,19,561 மதிப்பிலான இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றார் போல், சமூக சீர்திருத்தத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, சமூகத்தில் நலிந்த பிரிவினரைப் பாதுகாத்து அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது".



இலவச வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கையில், என் பெயர் முத்துலெட்சுமி. நான் தூத்துக்குடி வட்டம் கீழத்தட்டப்பாறை கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது. நானும் என் கணவரும் அன்றாட கூலி வேலை பார்த்து தான் குடும்பத்தை நடத்தி வருகிறோம். நாங்கள் சுமார் இருபது வருடத்திற்கு மேல் கீழத்தட்டப்பாறை கிராமத்தில் நத்தம் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறோம். எங்கள் வீட்டிற்கு இலவச வீட்டுமனை பட்டா வாங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பதான் சொன்னாங்க கீழத்தட்டப்பாறை கிராமத்தில் மனுநீதி நாள் முகாம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் வழங்கபோறாங்கனு சொன்னாங்க. அரசு அலுவலர்கள் எங்க கிராமத்திற்கு நேரில் வந்து மக்களிடம் கோரிக்கை மனுக்கள் வாங்குனாங்க. அப்ப நானும், நான் குடியிருக்கும் வீட்டிற்கு இலவச வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பித்தேன். பின்னர், மனுநீதி நாள் முகாம் நடைபெறும் ஒருநாளுக்கு முன்பாக உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது நீங்கள் மனுநீதி நாள் முகாமிற்கு வந்து இலவச வீட்டுமனை பட்டா வாங்கிக்கோங்கனு சொன்னாங்க. அப்புறம் முகாமிற்கு வந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கையாள வாங்கியது மிகவும் மகிழ்ச்சியா இருந்தது. என்னைப்போன்ற ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகளுக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் எங்களது கோரிக்கையினை ஏற்று வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கும் என் குடும்ப சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தொகுப்பு:–
**நவீன்பாண்டியன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**முத்துக்குமார்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.

## சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்த அமைச்சர்கள்



அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், சிறுகிணர் ஊராட்சி, நொச்சிபாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுகிணர், கொழுமங்குழி, கொக்கம்பாளையம் ஊராட்சிகளில் பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் முதலமைச்சரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சடையபாளையம் மற்றும் கொளத்துப்பாளையம் ஊராட்சிகளில் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

## சித்தர் கோவிலில் மஹா கும்பாபிஷேகம்



சேலம், மே 4–

சேலம் மாவட்டம், சித்தர் கோவில் கிரிவல பாதை என்னும் புண்ணிய பூமியில் எழுந்து அருள் பாலித்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஷோடசி பாலா த்ரிபுர சுந்தரி அம்பிகை ப்ரதிஷ்டை செய்து மஹா கும்பாபிஷேகமும் மற்றும் ஆச்சார்யாபிஷேக விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் மங்கள வாத்தியத்துடன் இரண்டாம் கால யாக பூஜை, ஸ்பர்ஸாஹீதி, த்ரவ்யாஹீதி, ஜெயாதி ஹோமம், மகா பூர்ணாஹீதி, தீபாராதனை நடைபெற்றது. பிறகு கடன் புறப்பாடு செய்து, ஆச்சார்யாபிஷேகம் ஆச்சார்ய தீட்சை வழங்கி மூல மந்திர ஜெப பாராயணம் செய்து, மஹா கும்பாபிஷேகம் மிக விமர்சையாக நடைபெற்றது. இதில் அம்பிகைக்கு சிறப்பு அலங்காரம் செய்து சிறப்பு அபிஷேகம் மஹா தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பொதுமக்கள் கலந்கொண்டு வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ சிவகார்த்திகேயன் சுவாமிகள் மற்றும் சிவ ஸ்ரீ சுகனேஸ்வரன் சுவாமிகளுக்கு ஆச்சார்யாபிஷேகம் நடைபெற்றது. இதில் ஸ்ரீ சிவசக்தி சண்முகா சாஸ்திரிகள், கோவை காமாட்சிபுரி ஆதீனம் சிவலிங்கேஸ்வர சுவாமிகள், பேரூர் ஆதீன துறவி சிவசண்முக சுந்தர அடிகளார், சைலாபுரி ஆதீனம் நித்ய சிவ ஸ்ரீ கோவிந்தராஜ் சாஸ்திரிகள், திருபையூர் ஸ்ரீ சக்தி பீடம் ஸ்ரீ சத்ய சுவாமிகள், ஸ்ரீ கருமாரியம்மன் சக்தி பீடம் சிவ செந்தில்குமார அடிகளார், ஓம் சக்தி முருகன் சித்தர் பீடம் முருகன் சுவாமிகள், ஸ்ரீசேலம் சித்தர் சித்தரசு சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டு அருளாசி வழங்கினார்கள். மஹா கும்பாபிஷேக விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்கள்.

## தமிழ் வார விழாவில் வருவாய்த்துறை பணியாளர்களுக்கு கையெழுத்து, கவிதை போட்டி



விழுப்புரம், மே 4–

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு, நடைபெற்ற தமிழ் வார விழாவில் வருவாய்த்துறை பணியாளர்களுக்கான பல்வேறு வகையான போட்டிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், விதி 110ன்கீழ், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு, ஏப்ரல் 29ந் தேதி முதல் மே 5ந் தேதி வரை தமிழ்நாடு முழுவதும் தமிழ் வாரம் கொண்டாடப்படும் என அறிவித்துள்ளார்கள்.

அதனடிப்படையில், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் தமிழ் வார விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு பல்வேறு விதமான போட்டிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், இன்றைய தினம், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு, நடைபெற்ற தமிழ் வார விழாவில் வருவாய்த்துறை பணியாளர்களுக்கான பல்வேறு வகையான போட்டிகள் நடைபெற்றது.

இதில், கையெழுத்து போட்டியும், கவிதை வாசிப்பு போட்டியாக ஏதேனும் ஒரு பாரதிதாசன் கவிதை வாசித்தல் போட்டியும், பேச்சுப்போட்டியாக பாரதிதாசனின் மொழிப்பற்று, தமிழ்த்தாயின் தவப்புதல்வன், பாரதிதாசன் பார்வையில் பெண் விடுதலை போன்ற தலைப்புகளும், கணினித்தமிழ் வினாடி–வினா போட்டியில் கணினித் தொடர்பான ஆங்கில வார்த்தைகளுக்கு தமிழ் பொருள் சொல்லுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெறும் பணியாளர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும், போட்டிகளில் பங்கேற்ற அனைத்து பணியாளர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் 05.05.2025 அன்று வழங்கப்படவுள்ளது.

எனவே, நடப்பு ஆண்டு முதல் தமிழ் வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. தற்பொழுது நடைபெற்ற தமிழ் வார விழாவில், அலுவலர்கள் முதல் பணியாளர்கள் வரை தமிழ் ஆர்வத்துடன் பல்வேறு போட்டிகளில் பங்குபெற்றுள்ளது மகிழ்ச்சியாக உள்ளதுஎன மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் யோகஜோதி, விழுப்புரம் வருவாய் நேர்முக உதவியாளர் (பொது) கோட்டாட்சியர் முருகேசன், தமிழ்வளர்ச்சித்துறை உதவியாளர் தமிழ்ச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மூலம் செயற்கை கால்கள் பொருத்த உதவிய முதல்வர்

## மதுரை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி

**மதுரை, மே 4–**

அரசு இராசாசி மருத்துவமனையின் இயல்பியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவத் துறையினர் 2 கால்களையும் இழந்த பெண்ணுக்கு செயற்கை கால்கள் பொருத்தியும், வேலைக்கு செல்ல மின்சார வாகனம் பெற உதவியும் சாதனை.

தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் பொதுமக்கள் தரமான மருத்துவ வசதிகளை பெற்று பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவ திட்டம். நம்மை காக்கும் 48 மணி நேரம் திட்டம் போன்ற திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னோடி திட்டங்களாகவும், பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டங்களாகவும் விளங்கி வருகிறது.



மேலூர் அருகே நொண்டிக் கோவில் பட்டியைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் மனைவி காளிமகாதேவி (41), மேலூர் நகராட்சியில் ஒப்பந்த துப்புரவு பணியாளராக இருந்தபோது காலில் பீங்கான் குத்தியதில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். எனினும் 2 கால்களையும் இழக்கும் சூழல் ஏற்பட்டது. இந்நிலையில், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையின் இயல்பியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவத் துறையினர் காளிமகாதேவிக்கு செயற்கை கால்கள் பொருத்தி நடமாடச் செய்ததோடு வேலைபார்க்கும் தொழிலாளியாக்கி சாதனை படைத்துள்ளனர். மதுரை அரசு மருத்துவக்கல்லூரி டீன் அருள்சுந்தரேஷ்குமார், முட நீக்கியல் பிரிவு துறைத்தலைவர் எஸ். ராமநாதன், உதவிப் பேராசிரியர் ஜி.கே.சிந்தியா மற்றும் டி.வரத ராஜன் ஆகியோர் அப்பெண்ணுக்கு சிகிச்சை அளித்து தன்னம்பிக்கையுடன் எழுந்து நடமாடச் செய்துள்ளனர்.

இதுகுறித்து, மதுரை அரசு இராசாசி மருத்துவமனை மருத்துவக்குழுவினர் கூறியதாவது:. காளிமகாதேவிக்கு 2 கால்களிலும் ரத்தக்குழாய் அடைப்பு மற்றும் கட்டுப்பாடற்ற சர்க்கரை நோயால் 2 கால்களும் (தொடைப் பகுதியிலிருந்து) நீக்கப்பட்ட நிலையில் மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு வந்தார். ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்த நீரிழிவு மாத்திரைகள் வழங்கினோம். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உள்நோயாளியாக அனுமதித்தோம். மருத்துவத்துறையின் செயற்கை அவயங்கள் துணை நிலையத்தில் தொழில்நுட்ப வல்லுநர்களால் செயற்கை கால்கள் வடிவமைத்து கொடுத்தோம்.

தொடைக்கு மேல் 2 கால்களையும் இழந்தவருக்கான பயிற்சி சவால் நிறைந்தது. சாதாரண உடல்திறனுடைய நபர்களை விட 200 சதவீதம் அதிக ஆற்றல் தேவைப்படும். 2 முழங்காலிலும் இயக்க உணர்வு இல்லாததால் சமநிலையுடன் இருப்பது கடினம். மேலும் செயற்கை காலின் சமநிலை, நடைப்பயிற்சி பிசியோதெரபிஸ்டுகளால் அளிக்கப்பட்டது. 3 மாத தொடர் சிகிச்சையால் நல்ல முன்னேற்றம் அடைந்தார் கானிமகாதேவி. தற்போது அவர் தன்னிச்சையாக நடக்கும் திறனைப் பெற்று எங்களது முயற்சியில் எலக்ட்ரிக் 3 சக்கர வாகனத்தை இலவசமாக பெற்றுத் தந்தோம். இதன்மூலம் தனியார் உணவு நிறுவனத்தில் டெலிவரி பணியாளராக வேலை செய்து வருகிறார் என்று கூறினர்.

இதுகுறித்து, மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று செயற்கை கால்கள் பொருத்தப்பட்ட காளிமகாதேவி தெரிவித்ததாவது: 2 கால்களையும் இழந்து படுக்கையில் முடங்கிய என்னை அரசு இராசாசி மருத்துவமனையின் இயல்பியல் மற்றும் புனர்வாழ்வு மருத்துவத் துறையினர் செயற்கை கால்கள் பொருத்தி பயிற்சி அளித்தனர்.



தன்னம்பிக்கையோடு நடமாடச் செய்தனர். எலக்ட்ரிக் வாகனம் மூலம் தனியார் உணவு நிறுவனத்தில் உணவு விநியோகித்து வருகிறேன். இதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் 3 மகள்கள், ஒரு மகனையும் பராமரித்து வருகிறேன். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் எனக்கு செயற்கை கால்கள் பொருத்தப்பட்டது. இத்தகைய திட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு:–
**சாலி தளபதி**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**ம.கயிலைச் செல்வம்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை மாவட்டம்.

# தன்னார்வலர்கள் சைக்கிள் பேரணி




வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் சுப்புலெட்சுமி புற உலக சிந்தனை குறைபாடு என்று அழைக்கப்படும் ஆட்டிசம் நோய் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தன்னார்வலர்கள் கலந்துகொண்ட சைக்கிள் பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## நலிவடைந்த நாதஸ்வரம், இசை கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்க கோரிக்கை





**திண்டுக்கல், மே 4–**

தமிழக முழுவதும் கருவூலத்திலிருந்து ஓய்வூதியர்களுக்கு ஒவ்வொரு மாதம் இறுதிவேலை நாளில் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாத இறுதிவேலை நாளில் கரூர் மாவட்டத்தில் நலிந்த கலைஞர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. மேலும் இதுநாள்வரை வழங்கப்படவில்லை. ஆகையால் ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதியம் கிடைக்கப்பெறுமா அல்லது அரசால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதா என ஓய்வூதியர்கள் கேள்வியை எழுப்புகின்றனர்.

# கோடை கால அறிவியல் பயிற்சி முகாம்





தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் நகர் பகுதியில் அமைந்துள்ள அறிவியல் பூங்காவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி இணைந்து நடத்தும் பள்ளி மாணவர்களின் கோடை கால விடுமுறையை பயனுள்ள அறிவுப்பயணமாக மாற்றும் நோக்கத்தில், "ஏனென்று கேள்" எனும் தலைப்பில் நடைபெறும் கோடை கால அறிவியல் பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

# தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**நாமக்கல், மே 4–**

நாமக்கல் மாநகராட்சி, பூங்கா சாலையில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

2026ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் 100 % வாக்குப்பதிவு மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து மே 1, 2025 தொழிலாளர் தினத்திற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் மே1, 2025 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு பொதுத்தேர்தலில் 100% வாக்குப்பதிவு மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், வாக்காளர் உறுதிமொழியான "மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கருதும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்மையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம்." என்ற உறுதிமொழியை ஏராளமான கட்டுமான தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் சாந்தி, தொழிலாளர் நல உதவி ஆணையர் கே.பி.இந்தியா, (சமூக பாதுகாப்பு திட்டம்) ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், கட்டுமான தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# பழங்குடியின மக்களின் குழந்தைகளுக்கு சிறப்பு முகாம்



**தென்காசி, மே 4–**

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமம், கலைமான் நகர் பளியர் குடியிருப்பில் குடியிருந்து வரும் பழங்குடியின மக்களின் குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் கடைக்கோடியில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் தமிழ்நாடு அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் கிடைத்து பயன்பெற அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம், கடையநல்லூர் வட்டம், கிருஷ்ணபுரம் கிராமம், கலைமான் நகர் பளியர் குடியிருப்பில் குடியிருந்து வரும் பழங்குடியின மக்களின் குழந்தைகளுக்கு நடைபெற்ற சிறப்பு முகாமில், 20 குடும்பங்களை சேர்ந்த 50 குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பு முகாமில், ஆதார் அட்டை எடுத்தல், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், இருப்பிட சான்று வழங்கல், பளியர் இனமக்களின் குடியிருப்பில் உள்ள குறைபாடுகள் தொடர்பான 12 மனுக்கள் பெறப்பட்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உரிய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளையும் அறிந்து பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, சங்கரன்கோவிலில் ரூ.5.36 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் கட்டுமான பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என உரிய அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, கடையநல்லூர் வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் கந்தசாமி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொல்லிமலை காப்பு காடு பகுதிகளில் 6 தடுப்பணை, 3 கசிவுநீர் குட்டை அமைக்கப்பட்டுள்ளன



**நாமக்கல், மே 4–**

## நாமக்கல் ஆட்சியர் தகவல்

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், வரகூர் காப்புகாடு பகுதியில் 1.5.2025 அன்று வனத்துறை சார்பில் வளமிகு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தடுப்பணை மற்றும் கசிவுநீர் குட்டை அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் உமா, வன பாதுகாவலர் (நாமக்கல் வன கோட்டம்) கலாநிதி முன்னிலையில் செய்தியாளர்களுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பொதுப்பயன்பாடுகள் மற்றும் ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள துறை சார்ந்த திட்டங்களை ஒருங்கிணைத்து, கூடுதலாக அரசு உதவி தேவைப்படும் வட்டாரங்களைக் கண்டறிந்து, வளர்ச்சிக்கான வளங்களை பெருக்குவதற்கு வட்டார அளவிலான நிர்வாகங்களில், திறனை உருவாக்குவதும், பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது விரைவான வளர்ச்சியை அடைய அவற்றை திறம்பட பயன்படுத்துவது வளமிகு வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். அந்த வகையில், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டாரத்தில் வளமிகு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடுதல், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திட தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பைல்நாடு காப்பு காடு, வரகூர் காப்புகாடு, அடுக்கம் புதுக்கோம்பை காப்பு காடு, குண்டூர் காப்பு காடு, செல்லூர் காப்பு காடு ஆகிய பகுதிகளில் தலா ரூ.3 லட்சம் வீதம் மொத்தம் ரூ.15.00 லட்சம் மதிப்பில் 5 தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பைல்நாடு காப்பு காடு. அடுக்கம் புதுக்கோம்பை காப்பு காடு. வரகூர் காப்புகாடு ஆகிய 3 பகுதிகளில் தலா ரூ.5 லட்சம் வீதம் மொத்தம் ரூ.15.00 லட்சம் மதிப்பில் கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், செல்லூர் காப்பு காடு பகுதியில் ரூ.3 லட்சம் மதிப்பில் தடுப்பணை தூர்வாரப்பட்டுள்ளது.

காப்பு காடுகளில் தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

# தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு திமுக உதவி



**விழுப்புரம், மே 4–**

விழுப்புரம் தெற்கு மாவட்டம் திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம் மனக்குப்பம் ஊராட்சியில் மாயவன் மற்றும் தர்மலிங்கம். இவர்கள் வீடுகள் மின் கசிவினால் தீப்பற்றி எரிந்துவிட்டது. வீட்டில் உள்ள அனைத்து பொருள்களும் சேதம் ஆகி உள்ளது. இதை அறிந்த முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் டாக்டர் பொன் கவுதமசிகாமணி ஆலோசனைப்படி திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட கவுன்சிலர் விசுவநாதன் மற்றும் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஓம் சிவ சக்திவேல் தலைமையில் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகள், துணிமணிகள் போன்ற உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட பிரதிநிதி சடகோபன், ஒன்றிய துணைச் செயலாளர் ஏழுமலை, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், ஓட்டுநர் அணி சிவா, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் உமா நாகப்பன், கிளைக் கழக செயலாளர்கள் சோமசுந்தரம், கேசவன், சிவஞானம், ஜெயபால், அன்பழகன், ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் முத்து, சரவணன், சதீஷ், ராமலிங்கம் மெகட்டி மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் தனியார் பள்ளி பேருந்துகளை ஆட்சியர் ஆய்வு

**தென்காசி, ஏப். 4–**

தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலக எல்லைக்கு உட்பட்ட தனியார் பள்ளி வாகனங்களின் தரம் குறித்த வருடாந்திர ஆய்வு மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது, தென்காசி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் தனியார் பள்ளி பேருந்துகள் ஆய்வு செய்யப்படும். அதனடிப்படையில் இன்றைய தினம் தனியார் பள்ளி பேருந்துகளில் வேக கட்டுப்பாட்டு கருவி, முதலுதவி பெட்டிகள், இருக்கை வசதிகள் மற்றும் பேருந்துகளின் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பள்ளி வாகனங்களில் அதிக ஒலி எழுப்பக் கூடிய ஒலிப் பான்களை அகற்றும்படியும் அறிவுறுத்தப்பட்டது. தென்காசி, ஆலங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 463 பள்ளி பேருந்துகளும், தென்காசி வட்டார பகுதிகளில் இருந்து 400க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளும் இந்த ஆய்வில் பங்கேற்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர் மாரியப்பன், வட்டார போக்குவரத்து அலுவலர் (பொறுப்பு) செல்வி, மோட்டார் வாகன ஆய்வாளர் மணி பாரதி, ஆலங்குளம் மோட்டார் வாகன ஆய்வாளர் கனகவள்ளி மற்றும் போக்குவரத்து ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# விழுப்புரம் டேக்வாண்டோ வாரியர்ஸ் மாணவர்களுக்கு பாராட்டு



விழுப்புரம், மே 4-

விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த டேக்வாண்டோ வாரியர்ஸ் மாணவர்கள் சென்னை கோடம்பாக்கம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்ரீமதி லதா ரஜினிகாந்த் மற்றும் ஸ்ரீமதி ஐஸ்வர்யா ரஜினிகாந்த் முன்னிலையில் பயிற்சியாளர் த.பாலகணேசன் வழிகாட்டுதலின்படி தனிதிறமையை வெளிப்படுத்தினர். மேலும் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தந்து எங்களுக்கு வழிகாட்டிய கல்யாணசுந்தரத்துக்கு நன்றியை தெரிவித்தனர்.

# திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயிலில் சித்ரா பௌர்ணமி முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



திருவண்ணாமலை, மே 4-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் அருணாச்சலேசுவரர் கோயில் சுற்றியுள்ள மாடவீதிகள் மற்றும் கோயில் வளாகத்தில் சித்ரா பௌர்ணமி நடைபெறவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.


திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் சித்ரா பௌர்ணமி நடைபெறவுள்ளதை முன்னிட்டு பக்தர்கள் எவ்வித சிரமுமின்றி சுவாமி தரிசனம் செய்து கிரிவலம் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் கோயில் சுற்றியுள்ள பகுதிகள், கிரிவலப்பாதை, அடிப்படை வசதிகளான கழிவறை, குடிநீர் மற்றும் கிரிவலப்பாதையில் உள்ள கடைகள், தற்காலிக பேருந்து நிலையங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் உள்ளிட்டவற்றை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதன்தொடர்ச்சியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அருணாச்சலேசுவரர் கோயில் மாடவீதியில் வடக்கு மற்றும் கிழக்கு ரத வீதிகளில் நடைபெற்று வரும் சிமெண்ட் சாலைப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பக்தர்களுக்கு இடையூறுகள் ஏற்படாவண்ணம் விரைந்து பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். மேலும் மாடவீதியை சுற்றியுள்ள கடைகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், ஒத்தவடை தெரு, இராஜகோபுரம், திருமஞ்சன கோபுரம் மற்றும் வீதி, அம்மணிஅம்மன் கோபுரம் உள்ளிட்ட பகுதிகளில் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள். தொடர்ந்து கோயில் வளாகத்திற்குள் ஆய்வு செய்து, கட்டுப்பாட்டு அறை, கண்காணிப்பு கேமராக்கள் மூலம் முறையாக கண்காணிக்கவும், மேலும் பக்தர்கள் எவ்வித சிரமுமின்றி சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளான குடிநீர் முறையாக வழங்கவும், நடைபாதைகளில் நிழற்பந்தல்கள், மேலும் அதிகப்படியான மேற்கூரையுடன் கூடிய நகரும் இரும்பு தடுப்பான்கள் மற்றும் தேங்காய் நார் விரிப்புகள் வைக்க துறைச்சார்ந்த அலுவலர்கள் அறிவுறுத்தினார்கள். அதனை தொடர்ந்து அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சதிஷ், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், திருவண்ணாமலை வட்டாட்சியர் மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பள்ளி, கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் கருவி, வாட்டர் ஹீட்டர் கருவி வழங்கப்படுகிறது

ஈரோடு ஆட்சியர் தகவல்



ஈரோடு, மே 4-

ஈரோடு மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் படித்து பயன்பெறும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 26 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் விடுதிகள் இயங்கி வருகின்றன. அதேபோன்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் படித்து பயன்பெறும் பொருட்டு 33 பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன.

மேற்படி இரண்டு துறைகளின் கீழ் இயங்கி வரும் விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர்களின் நன்மை கருதி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையில் இயங்கி வரும் 6 விடுதிகளுக்கு ரூ.1,08,000 மதிப்பிலான தண்ணீர் சுத்திகரிப்பான் கருவியும், அதேபோன்று ஈரோடு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்படும் 8 விடுதிகளுக்கு ரூ.3,27,340 மதிப்பிலான தண்ணீர் சுத்திகரிப்பான் கருவியும் மற்றும் 16 வாட்டர் ஹீட்டர் கருவிகளும் வழங்கிட மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் சுமார் 500 மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார்,

# பழுதடைந்த பள்ளி கழிப்பறைகளை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது





கடலூர் ஆட்சியர் தகவல்

கடலூர், மே 4-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் கிராமப்புறங்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ஊரக வளர்ச்சி துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சரால் ஊரக மக்களின் நலன் கருதியும். கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும், நகர்ப்புறங்களுக்கு இணையாக அனைத்து வசதிகளை கிராமங்களில் மேம்படுத்திடும் வகையிலும் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கிராம ஊராட்சிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு தேவைகளான சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு, ஃபேவர் பிளாக் மற்றும் தார் சாலை. சுடுகாடு, கழிவுநீர் கால்வாய் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருதல் மற்றும் மேம்படுத்துதல் தொடர்பாகவும், கிராம ஊராட்சிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல், திட, திரவ கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரப் பணிகள், கிராமப்புற நூலகம் அமைத்தல், பழுதடைந்த அங்கன்வாடி மைய கட்டடங்களை சீரமைத்தல், விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளின் எண்ணிக்கை, தற்போது பயன்பாட்டில் உள்ள கழிப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பயன்பாட்டில் இல்லாத பழுதடைந்த பள்ளி கழிப்பறைகளை விரைவில் சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊரகப்பகுதியில் உள்ள குடிசைகளை மாற்றி, அனைவருக்குமே பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்து தரும் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், இதுவரை இத்திட்டங்களின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் நிலை, வெவ்வேறு நிலைகளிலுள்ள வீடு கட்டுமானப் பணிகளின் நிலை குறித்தும் கேட்டறியப்பட்டது.

கிராமப்புறங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் உள்ளிட்ட அனைத்துத் திட்டப்பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். கூட்டத்தின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சித்துறை) வரதராஜபெருமாள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சேலத்தில் பாரதிதாசன் குறித்து கையெழுத்து போட்டி



சேலம், மே 4-

பாவேந்தன் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட தமிழ் வார விழா கொண்டாடும் விதமாக, மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலர்கள் பங்கேற்ற பாவேந்தன் பாரதிதாசன் குறித்த கையெழுத்துப் போட்டிகள் மாநகராட்சி துணை ஆணையாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில், தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் ஜோதி முன்னிலையில் சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றப் பேரவை விதி எண் 110 ன் கீழ், தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான பாவேந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு, 29.04.2025 முதல் 05.05.2025 வரை ஒரு வார காலத்தற்கு தமிழ் வார விழா கொண்டாடப்படும்" என அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட தமிழ் வார விழா சேலம் மாவட்டத்தில் கடந்த 29.04.2025 முதல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் அரசு அலுவலர்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் தமிழ் மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கையெழுத்துப் போட்டிகள், அறிவியல் மற்றும் கணினி தமிழ் குறித்த வினாடி வினா நிகழ்ச்சிகள், கையெழுத்துப் போட்டிகள், தலைப்பு கொடுக்கப்பட்டவுடன் முன் தயாரிப்பு ஏதுமின்றி உடனடியாக பேசும் பேச்சுப் போட்டி, கதை சொல்லும் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் 29.04.2025 முதல் 05.05.2025 வரை நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், மாணவ, மாணவிகளிடையே பாவேந்தன் பாரதிதாசன் குறித்த கட்டுரைப் போட்டிகளும், அரசு அலுவலர்களுக்கான வினாடி, வினாப் போட்டிகளும் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் பாவேந்தன் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு, நடத்தப்பட்ட "தமிழ் வார விழா" கையெழுத்துப்போட்டியில் மாநகராட்சி மற்றும் 6 நகராட்சிகளைச் சேர்ந்த 33 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# தூத்துக்குடியில் கோடை கால அறிவியல் பயிற்சி முகாம்

## ஆட்சியர் இளம்பகவத் தொடங்கி வைத்தார்

**தூத்துக்குடி, மே 4–**

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் நகர் பகுதியில் அமைந்துள்ள அறிவியல் பூங்காவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி இணைந்து நடத்தும் பள்ளி மாணவர்களின் கோடை கால விடுமுறையை பயனுள்ள அறிவுப்பயணமாக மாற்றும் நோக்கத்தில், 'ஏனென்று கேள்' எனும் தலைப்பில் நடைபெறும் கோடை கால அறிவியல் பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போது தெரிவித்ததாவது: பள்ளி மாணவர்கள் கோடை கால விடுமுறை நாட்களை பயனுள்ள நேரமாக கழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, யாராக இருந்தாலும் எந்தஒரு செயல்களிலும் ஏன் என்ற கேள்வி எழுப்ப வேண்டும். அப்போது தான் அதன் முழுமையான கருத்துக்களை தெரிந்து கொள்ள முடியும். அந்தவகையில், அறிவியல் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் மூலமாக மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் விதமாக இந்த கோடைகால பயிற்சி முகாம் அமையவுள்ளது. இந்த அறிவியல் பூங்காவில் அறிவியலின் பல்வேறு பரிமாணங்கள் மிகச் சிறந்த அளவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள மிகவும் அற்புதமான ஒரு பூங்கா. வெளிப்புறத்தில் பல்வேறு விதமான அறிவியல் கண்காட்சிகளும், உள் அரங்கத்தில் அறிவியல் சார்ந்த பல்வேறு கருத்துக் கண்காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. அறிவியல் பூங்காவில் உள்ள அறிவியல் சார்ந்த படைப்புகளை பார்த்து முடிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு நாளாகும். அறிவியல் கருவிகளின் தத்துவங்கள் என்ன? அதன் செயல்பாடுகள் என்ன? என்று மாணவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்திலிருந்து பல்வேறு மாவட்டங்களின் சிறந்த அறிவியல் வல்லுநர்கள் மற்றும் கருத்தாளர்கள் வரவழைக்கப்பட்டுள்ளார்கள். இன்னும் மூன்று வாரத்திற்கு பல்வேறு விதமான அறிவியல் சார்ந்த நிகழ்வுகள் நடைபெற உள்ளன. சனி மற்றும் ஞாயிறு தினங்களில் குட்டித் திரை என்று சொல்லக்கூடிய சிறுவர்களுக்கான அறிவியல் சார்ந்த கருத்துக்கள் அடங்கிய திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. இன்று தொடக்கமாக, உலகப் புகழ்பெற்ற இயக்குனர் கிறிஸ்டோபர் இயக்கிய இன்டர்ஸ்டெல்லர் 2014 என்று சொல்லக்கூடிய அற்புதமான விண்வெளி அறிவியல் பற்றிய திரைப்படம் திரையிடப்படுகிறது. மேலும், தேசிய அளவில் சாம்பியன்ஷிப் பெற்ற வீரர்களின் வழிகாட்டுதலின்படி சதுரங்கப் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. விருப்பமுள்ள மாணவர்கள் பதிவுசெய்து கலந்துகொள்ளலாம். இம்முகாமில், கணக்கும் இனிக்கும், கைகளில் கண்ணாம் பூச்சி, அறிவியல் பரிசோதனைகள், ஓரிகமி, கற்பனையும் கைத்திறனும், பொம்மலாட்டம், பலூனில் பொம்மைகள், மந்திரமா தந்திரமா, அறிவியல் கோமாளி, அறிவியல் ஆனந்தம், கதை சொல்வோம் கதை உருவாக்குவோம், விளையாட்டை கற்போம், நம்புவீர்களா? போன்ற தலைப்புகளில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்திலிருந்து பல்வேறு கருத்தாளர்கள் வருகைதந்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளார்கள்.

மேலும், குழந்தைகளுக்கு பல்வேறு விதமான சிறு, சிறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவதற்கு பல்வேறு ஆர்வலர்கள் தயாராகவுள்ளனர். ஒவ்வொரு அறிவியல் படைப்புகளுக்கும் பின்னால் இருக்கக்கூடிய பல்வேறு விதமான அறிவியல் தத்துவங்களை குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் எடுத்துரைக்கவுள்ளார்கள். குழந்தைகள் இந்த அறிவியல் பயிற்சி முகாமினை பயன்படுத்துவதால் 12ஆம் வகுப்பு வரை உள்ள பல்வேறு விதமான அறிவியல் தத்துவங்களில், கிட்டத்தட்ட 80 வகையான அறிவியல் தத்துவங்களை பார்த்து உணர்ந்து புரிந்து கொள்ள முடியும். இந்த வாய்ப்புகள் எல்லாம் கிடைக்கக்கூடிய இடம் தான் இந்த அறிவியல் பூங்கா. குழந்தைகள் சந்தோஷமாகவும் இனிமையாகவும் கற்பதற்கு ஏதுவாக இந்த கோடைகால அறிவியல் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரிய வாய்ப்பினை அனைத்துக் குழந்தைகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த அறிவியல் பூங்காவினை சிறப்பாக பராமரித்து வரும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்துப் பள்ளி மாணவர்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். இந்த 20 நாட்களில் கற்றுக் கொள்ளும் அறிவியல் பூர்வமான விஷயங்கள் உங்களது குழந்தைகளுடைய அறிவியல் சிந்தனையையும் அறிவியல் சார்ந்த மனப்பான்மையையும் ஊக்கப்படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் பெரிய அளவில் உதவும் என்பதில் ஐயம்மில்லை. எனவே, பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தங்களது குழந்தைகளை இந்த கோடைகால அறிவியல் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள செய்ய வேண்டும் என அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஐஸ்வர்யா, உதவி ஆணையர் சுரேஷ்குமார், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் முனைவர் சாந்தகுமாரி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# வீர பெண்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிற்சங்கம் துவக்க விழா



**கோவை, மே 4–**

கோவை சிங்காநல்லூர் ராமானுஜம் நகரில் கோயம்புத்தூர் வீர பெண்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிற்சங்கம் துவக்க விழா மற்றும் பெயர்ப்பலகை திறப்பு விழா நடைபெற்றது. துவக்க விழாவில் ஸ்ரீ தேவி டெக்ஸ்டைல்ஸ் சிவக்குமார், நேருநகர் லயன்ஸ் சங்கம் வட்டார தலைவர் மோகன் ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு சங்கத்தை துவக்கி பெயர் பலகையை திறந்து வைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தனர். சங்கம் திறப்பு விழாவில் நிர்வாக செயலாளர் லயன் ரேவதி மோகன்ராஜ், கண்ணதாசன், லல்லி,, மூர்த்தி,, ராமநாதன்,பசீர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு திறப்பு விழாவினை சிறப்பித்தனர். இதுகுறித்து நிர்வாகிகள் தெரிவிக்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண் ஆட்டோ ஓட்டுநர்கள் ஒன்றிணைந்து கோயம்புத்தூர் வீரப்பெண்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிலாளர் சங்கத்தை துவக்கியுள்ளோம். சங்கத்தின் முக்கிய நோக்கம் பெண்களின் ஒற்றுமையை வலிமைபடுத்தவும் பெண் தொழிலாளர்கள் மற்றும் பெண் ஆட்டோ ஓட்டுநர்களின் பாதுகாப்பிற்காக துணை நிற்போம் என்று தெரிவித்தனர். முன்னதாக சங்க நிறுவனத்தலைவர் பாக்கியலட்சுமி கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று பேசினார். நிர்வாக செயலாளர் பூர்ணிமா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். திறப்பு விழாவில் பொது செயலாளர் கீதாமணி , பொருளாளர்கள் ஸ்டெல்லா மேரி, திவ்யா, இணை தலைவர் பேபிகமலா, துணை தலைவர் மும்தாஜ், இணை செயலாளர் நித்யாதேவி, துணை செயலாளர் கற்பகம், செயற்குழு உறுப்பினர் மீனாட்சி மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் பெண் ஆட்டோ ஓட்டுநர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# கோவையில் ஸ்மார்ட் கற்றல் திட்டம் அறிமுக விழா




**கோவை, மே 4–**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சாஃப்ட் சோர்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ரோட்டரி கிளப் ஆப் கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி உடன் இணைந்து டிஜிட்டல் கல்விப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் புதுமையான ஏஐ அக்மெண்டட் ரியாலிட்டி அடிப்படையிலான ஸ்மார்ட் கற்றல் திட்டம் அறிமுக விழா மற்றும் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் விழா நடைபெற்றது. ஸ்மார்ட் கற்றல் திட்டம் முதற்கட்டமாக 112 அரசு பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன் குமார் கிரியப்பனவர் மற்றம் தலைமை கல்வி அதிகாரி ஆர் பாலமுரளி,மெட்ராஸ் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் தொழில்நுட்ப இயக்குனர் டாக்டர் நபி ஆகியோர் ஸ்மார்ட் கற்றல் திட்டத்தை அறிமுகப்படுத்தி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மடிக்கணினி வழங்கினார்கள்.சாஃப்ட் சோர்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் எஸ்.எம்.எஸ் அப்துல் மகீத் கூறுகையில், கோயம்புத்தூரில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடையும் வகையில் 112 அரசு பள்ளிகளில் ஸ்மார்ட் கற்றல் திட்டத்தினை தொடங்குவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். பள்ளி மாணவர்களுக்கான ஸ்மார்ட் கற்றல் திட்டத்தில் ரோட்டரி கிளப் ஸ்மார்ட் சிட்டியுடன் இணைந்து செயல்படுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள், நிறுவன அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# 19 பிரீமியம் அம்சங்களுடன் 'இன்னோவா ஹைக்ராஸ் எக்ஸ்க்ளூசிவ் எடிஷன்' டொயோட்டா கிர்லோஸ்கர் அறிமுகம்

**கோவை, மே 4–**



வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை என்ற தத்துவத்திற்கு முக்கியத்துவம் அளித்து வரும் டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம், வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து அதை பூர்த்தி செய்யும் விதமாக அதிநவீன கூடுதல் சிறப்பு அம்சங்களுடன் 'இன்னோவா ஹைக்ராஸ் எக்ஸ்க்ளூசிவ் எடிஷன்'இசட் எக்ஸ் (ஓ) மாடல் காரை அறிமுகம் செய்துள்ளது. இன்னோவா ஹைக்ராஸ் மாடலின் குறிப்பிடத்தக்க வெற்றியைக்கொண்டாடும் விதமாக இந்த புதிய பதிப்பு, அதன் மேற்புறம், முன்புற கிரில், பின்புறம், அலாய் சக்கரங்கள், அதன் லோகோ, முன்புறத்தின் கீழ்பகுதி, சக்கரத்தின் வளைவுபகுதி, வெளிப்புற கண்ணாடியின் மேற்புறம், பின்புற கதவு கைப்பிடி ஆகியவை கறுப்பு நிறத்திலும், அதன் உட்புறத்திலும் இன்ஸ்ட்ரூமென்ட் பேனல், கதவு கைப்பிடி, இருக்கை, சென்டர் கன்சோல் ஆகியவை இரட்டை வண்ணத்தையும் கொண்டுள்ளன. மேலும் கூடுதலாக ஏர் ப்யூரிபையர், கால் வைக்கும் இடங்களில் விளக்கு மற்றும் வயர் இல்லாத சார்ஜர் உள்ளிட்ட கூடுதல் சிறப்புகளையும் கொண்டுள்ளது. அந்த வகையில் தற்போது ஒவ்வொரு பயணமும் ஓட்டுனர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள 'இன்னோவா ஹைக்ராஸ் எக்ஸ்க்ளூசிவ் எடிஷன்' இசட் எக்ஸ்(ஓ) வரும் ஜூலை மாதம் வரைசூப்பர் ஒயிட் மற்றும் பேர்ல் ஒயிட் ஆகிய இரண்டு வண்ணங்களில் கிடைக்கும் நாடு முழுவதும் எக்ஸ் ஷோரூம் விலை ரூ.32,58,000 ஆகும். இந்த புதிய அறிமுகம் குறித்து டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனத்தின் பயன்படுத்தப்பட்ட கார் வணிக விற்பனை மற்றும் சேவைப் பிரிவு துணைத்தலைவர் வரீந்தர் வாத்வா கூறுகையில், இன்னோவாஹைக்ராஸ், எம்பிவியின் விசாலமான இடத்துடன் எஸ்யூவியின் சிறப்பு அம்சங்களுடன் வாடிக்கையாளர்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இன்று, எங்கள் விவேகமான வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில் அதிநவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட இசட் எக்ஸ்(ஓ) மாடல் இன்னோவா ஹைக்ராஸ் எக்ஸ்க்ளூசிவ் எடிஷனை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தடையற்ற, சோர்வு இல்லாத பயணத்திற்கான காரை விரும்பும் குடும்பங்களுக்கு இது ஏற்ற காராகும் என்று தெரிவித்தார். ஒப்பிடமுடியாத எரிபொருள் திறன் மற்றும் சிறந்த ஓட்டுனர் அனுபவம் ஆகியவற்றின் காரணமாக வாடிக்கையாளர்களால் மிகவும் விரும்பப்படும் காராக உள்ளது.

# ஸ்ரீமுத்தாலம்மன் மகளிர் மன்றம் கலைவாணி நூலகம் திறப்பு விழா



**மதுரை, மே 4–**

மதுரை வைகை வடகரை பகுதியில் மதுரை ஆயிர வைசிய மஞ்சபுத்தூர் மக்கள் சமூக நல சங்கத்தின் புதிய அலுவலகம் மற்றும் ஸ்ரீ முத்தாலம்மன் மகளிர் மன்றம் கலைவாணி நூலகம் திறப்பு விழா மிக விமர்சையாக சிறப்பாக நடைபெற்றது. தலைவர் பொன்னம்பலம், பொருளாளர் காசி விசுவநாதன், செயலாளர் ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ ஆலோசகர் அருணாச்சலம் முத்தாலம்மன், மகளிர் மன்ற தலைவி வினோதா செந்தில்குமார் எம்ஏவிஎம்எம் சபை தலைவர் பாஸ்கரன், கௌரவ சட்ட ஆலோசகர் ராஜாராமன், கண்ணதாசன் நற்பணி மன்ற தலைவர் சொக்கலிங்கம், உதவி செயலாளர் விஜயன் உட்பட சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# ஈரோடு மாநகரில் அங்கக விளை பொருட்களுக்கான வேளாண் சந்தை

## ஆட்சியர் ராஜ கோபால் சுன்கரா துவக்கி வைத்தார்



ஈரோடு, மே 4–

ஈரோடு மாநகரில் முதன் முறையாக அங்கக விளை பொருட்களுக்கான வேளாண் சந்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் ஈரோடு மாவட்டத்தில் அங்கக வேளாண் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிக்கவும் அவ்வாறு விளைவிக்கப்படும் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்து உரிய விலை கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்திடும் பொருட்டும், நுகர்வோருக்கு நஞ்சு இல்லா காய்கறிகள் கிடைத்திடவும் முதல் முன்னெடுப்பாக ஈரோடு மாநகராட்சி வ.உ.சி பூங்கா மைதானத்தில் உள்ள வாக்கர்ஸ் கிளப்பில் அங்கக வேளாண் சந்தையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா துவக்கி வைத்து, விவசாயிடமிருந்து விளை பொருட்களை நேரடியாக நுகர்வு செய்தார்.

மேலும் இன்றைய தினம் அங்கக சான்று பெற்ற விவசாய பெருமக்களில் 14 விவசாயிகள் அங்கக முறையில் விளைவிக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்களான புடலை, சுரைக்காய், வெள்ளரி, கத்தரிக்காய், பீர்க்கன்காய், கொத்தவரை, பாகற்காய், தர்பூசணி, வாட்டர் ஆப்பிள், வாழை, எலுமிச்சை, மாம்பழங்கள், கீரை வகைகள், தேங்காய், மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் விளை பொருட்கள், மஞ்சள் தூள், எண்ணெய் வகைகள், அரிசி வகைகளில் சீரகசம்பா, நாட்டு பொன்னி மற்றும் நாட்டு சர்க்கரை, புளி, ராகிபவுடர் உட்பட தாங்கள் விளைவித்த பொருட்களை விற்பனை செய்தனர். இச்சந்தையானது காலை 6 மணி முதல் 9 மணி வரை செயல்பட்டது. இன்றையதினம் வாக்கர்ஸ் கிளப்பில் உடற் பயிற்சிக்கு வருகை புரிந்த 100க்கும் மேற்பட்டவர்கள் அங்கக வேளாண் சந்தையில் விளை பொருட்களை வாங்கி பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை துணை இயக்குநர் குருசரஸ்வதி, வேளாண்மை துணை இயக்குநர், செயலாளர் ஈரோடு விற்பனைக்குழு சாவித்ரி, வேளாண்மை துணை இயக்குநர் ஸ்ரீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்கும் பணியை ஆட்சியர் ஆய்வு



கோவை, மே 4–

கோயம்புத்தூர் மாவட்டம் கிட்டாம்பாளையம் கிராமத்தில், ரூ.24.61 கோடி மதிப்பீட்டில் 316.04 ஏக்கர் பரப்பளவில் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில், ரூ.24.61 கோடி மதிப்பீட்டில் 316.04 ஏக்கர்பரப்பளவில் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது தொழிற்பேட்டையின் செயலாட்சியர் தொழிற்கூட்டுறவு அலுவலர் சுகந்தி, தொழிற்பேட்டையின் மேலாளர் சந்திரசேகரன், டிட்கோ கிளைமேலாளர் சண்முகவடிவேல், பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், துணைத்தலைவர் சோலைகணேஷ், தொழிற்பேட்டையின் உறுப்பினர்கள் மற்றும் தொழிற்பேட்டையின் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில், ரூ.24.61 கோடி மதிப்பீட்டில் 316.04 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வரும் அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையின் முதல் மற்றும் இரண்டாம் கட்ட மேம்பாட்டு பணிகள் முடிவடைந்துள்ளன. மூன்றாம் கட்டப் மேம்பாட்டு பணிகளான சாலைகள், சிறுபாலங்கள், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், அனைத்து மனைகளுக்கும் குடிநீர் குழாய் பதித்தல் மற்றும் இறுதி கட்ட மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்காணும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, திட்டப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து, தொழிற்பேட்டையின் செயலாட்சியர், தொழிற்கூட்டுறவு அலுவலர் மற்றும் தொழிற்பேட்டையின் மேலாளர் ஆகியோர் விளக்கம் அளித்தனர். மேலும் தொழிற்பேட்டையில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலங்களில் பசுமைபூங்கா ஏற்படுத்திடவும், தொழிற்பேட்டையின் மேம்பாட்டுப் பணிகளை விரைவில் நிறைவு செய்திடவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுரை வழங்கினார்.

# நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 75 குழந்தைகளுக்கு காசோலை

## ஆட்சியர் கமல்கிஷோர் வழங்கினார்



தென்காசி, மே 4–

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 75 குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் காசோலைகளை வழங்கினார்.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் கீழ், மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் சார்பில் மாவட்ட நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட 75 குழந்தைகளுக்கு கூட்டாண்மை சமூகப்பொறுப்பு நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் காசோலைகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். மேலும், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள்துறையின் கீழ் இயங்கும் மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலகின் மூலமும் அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் இதுபோன்று குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்கிட முன்வரவேண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டது..

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயசந்திரன், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் கவிதா, மாவட்ட நிதி ஆதரவு திட்ட ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய உதவி ஆணையர் (கலால்) ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொ) (கணக்கு) எபனேசர், தொழிலாளர் உதவி ஆணையர் திருவள்ளுவன், உதவி செயற்பொறியாளர் (தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்) நெல்லைமதி, இணை இயக்குநர் (பொது மேலாளர்) மாவட்ட தொழில் மையம் மாரியம்மாள் மற்றும் நிதி ஆதரவு மற்றும் வளர்ப்பு பராமரிப்பு ஒப்புதல் குழு உறுப்பினர்களாகிய இளைஞர் நீதிக்குழும உறுப்பினர்கள் குழந்தை நலக்குழு தலைவர் (ம) உறுப்பினர்கள், சுமதி, சமூகநல அலுவலர் (பொ), ராஜி ஞீளிபிளி நிறுவனம், நிதி ஆதரவாளர்களாகிய ஓம் பிரணவா ஆசிரம நிர்வாகி, செல்வராணி ஜவுளி கடை நிர்வாகி, நிதி ஆதரவாளர்கள், குழந்தைகள் மற்றும் குழந்தைகள் பெற்றோர், பாதுகாவலர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

# காசி யாத்திரைக்கு சென்ற புதுச்சேரி பக்தர்களை புதுச்சேரி அரசு பத்திரமாக மீட்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சிவா முதல்வரிடம் வலியுறுத்தல்



புதுச்சேரி, மே 4–

புதுச்சேரியிலிருந்து காசி யாத்திரை சென்ற பயணிகளை வாகனத்திற்கான பரிமிட் இல்லை என்று கூறி ராஜஸ்தான் போக்குவரத்துத்துறை வயதானவர்கள் என்றும் பாராமல் அவர்களை அடைத்து வைத்து கொடுமைப்படுத்துவதாக செய்தி வந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா முதல்வர் ரங்சாமியை தொடர்பு கொண்டு, ராஜஸ்தான் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் பிடித்து வைத்துள்ள புதுச்சேரி பக்தர்களை உடனடியாக மீட்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். மேலும், அவர்களை விடுவிக்க காலதாமதம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட பக்தர்களின் உறவினர்கள் இங்குள்ள ராஜஸ்தான் வாகனங்களை சிறைபிடிப்பில் ஈடுபடுவார்கள். இதன் மூலம் சட்டம், ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் சூழல் உருவாகும். ஆகவே, விரைவாக ராஜஸ்தான் அரசிடம் பேசி அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், போக்குவரத்து ஆணையர் சிவக்குமார் ஆகியோரையும் எதிர்க்கட்சித் தலைவர் சிவா தொடர்பு கொண்டு, காசி யாத்திரைக்கு சென்ற பயணிகளை பத்திரமாக மீட்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதனிடையே ராஜஸ்தான் அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள புதுச்சேரி உருளையன்பேட்டை தொகுதியைச் சேர்ந்த 10 பக்தர்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் அத்தொகுதி திமுக பொறுப்பாளர், திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் எஸ். கோபால் தமது சொந்த நிதியில் இருந்து ரூ.40 ஆயிரத்தை ராஜஸ்தானில் உள்ளவர்களின் வங்கி கணக்கில் அனுப்பி வைத்தார்.

# ஏற்காட்டில் சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கலைநிகழ்ச்சி

## ஆட்சியர் பிருந்தாதேவி பார்வையிட்டார்





சேலம், மே 4–

“தமிழ் வார விழா” வினை முன்னிட்டு சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி பார்வையிட்டார்கள்.

பாவேந்தன் பாரதிதாசன் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட தமிழ் வார விழா கொண்டாடும் விதமாக, சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றப் பேரவை விதி எண்: 110ன் கீழ், தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான பாவேந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு, 29.04.2025 முதல் 05.05.2025 வரை ஒரு வார காலத்திற்கு தமிழ் வார விழா கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட “தமிழ் வார விழா சேலம் மாவட்டத்தில் கடந்த 29.04.2025 முதல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் அரசு அலுவலர்கள், அரசு சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றில் தமிழ் மொழிப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் கையெழுத்துப் போட்டிகள், அறிவியல் மற்றும் கணினி தமிழ் குறித்த வினாடி, வினா நிகழ்ச்சிகள், கையெழுத்துப் போட்டிகள், தலைப்பு கொடுக்கப்பட்டவுடன் முன் தயாரிப்பு ஏதுமின்றி உடனடியாக பேசும் பேச்சுப் போட்டி, கதை சொல்லும் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் 29.04.2025 முதல் 05.05.2025 வரை நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், மாணவ, மாணவிகளிடையே பாவேந்தன் பாரதிதாசன் குறித்த கட்டுரைப் போட்டிகளும், அரசு அலுவலர்களுக்கான வினாடி, வினாப் போட்டி மற்றும் சேலம் மாநகராட்சி, நகராட்சி அலுவலர்கள் பங்கேற்ற கையெழுத்துப் போட்டிகளும் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, இன்றையதினம் சேலம் மாவட்டம், ஏற்காட்டிற்கு வருகைதந்த சுற்றுலாப்பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கலைபண்பாட்டுத் துறையின் சார்பில் சிலம்பாட்டம், தப்பாட்டம், பரதநாட்டியம் மற்றும் வாய்ப்பாட்டு உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதனை ஏற்காட்டிற்கு வருகை தந்திருந்த ஏராளமான சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சியுடன் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மஞ்சுளா, ஏற்காடு வட்டாட்சியர் செல்வராஜ், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் கலந்துகொண்டனர்.

# போட்டித் தேர்வுக்கான புத்தகங்கள் எளிதில் கிடைக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட நூலகங்களை திறந்த முதல்வர்

## புதுக்கோட்டை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி






**புதுக்கோட்டை, மே 4–**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து –திருக்குறள்.

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும் என்ற முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் திருக்குறள் விளக்கத்திற்கேற்ப தமிழ்நாடு முதலமைச்சர் மனிதனை மனிதனாக உயர்த்துவது கல்வி. மனித சமுதாயத்தை மாற்றி அமைக்கும் வலிமையான கல்வி. அந்த கல்வி வெள்ளத்தால் அழியாது. வெந்தணலில் இட்டாலும் வேகாது. கள்வரால் கொள்ளையடிக்கும் இயலாது. பிறருக்கு கொடுத்தாலும் குறையாது என்ற சீவக சிந்தாமணி பாடல் கூறும் வரிகளுக்கும் ஏற்பவும், படிப்பும், வேலைவாய்ப்பும் நம்முடைய உரிமை என்றும் கிளர்தெழுந்து புரட்சிகரமான கல்வித்திட்டங்களை திராவிட மாடல் அரசின்வழி உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள்.

இந்த சிந்தனையின் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் தொடக்கக்கல்வி மற்றும் உயர்க்கல்வியில் புதிய திட்டங்களை உருவாக்கி மக்களின் வாழ்வில் திறன்களை வலுப்படுத்தி அவர்களின் வாழ்க்கையில் உயர்நிலையை எட்டுவதற்கு அடித்தளத்தை உருவாக்கி வருகிறார்கள். புதுமைகளையும், நேர்த்தியையும் மேலோங்கும் செய்திடும் வகையில் தொலைநோக்கு திட்டங்களை ஆராய்ந்து, அத்திட்டங்கள் கடைக்கோடி மாணவர்களையும் சென்று சேர்ந்திடும் வகையில் செயலாற்றி வருகிறார்கள்.

“புத்தகத்தில் உலகை படிப்போம், உலகத்தை புத்தகமாய் படிப்போம்“ என்ற முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் சொல்லினை செயலாற்றும் வகையில் நூலகத்துறையில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் நூலகங்களை டிஜிட்டல் மயமாக்குதல், தகவல் சேகரிப்பு மற்றும் விநியோக முறைகளில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் மற்றும் வாசிப்பு ஆர்வத்தை மக்களிடையே அதிகரித்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. இப்புரட்சியின் காரணமான கற்றல் அனுபவத்தை மேம்படுத்தி, அறிவாற்றலை அதிகரிக்கும் அதிகிரிக்கும் காரணியாகும். அந்தவகையில் தமிழகத்தில் கன்னிமாரா நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள், நாடமாடும் நூலகங்கள் உள்ளிட்டவைகள் பெரும் பொருட்செலவில் புதிதாகவும், மேம்படுத்தப்பட்டும் மற்றும் டிஜிட்டல்முறையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், மேலும் டிஜிட்டல் நூலகங்கள் மாணாக்கர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் புதிய கற்றல் அனுபவத்தையும் வழங்கிட வாய்ப்பாகவும் உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மின்னணு நூலகம் மூலம் அரசுப் போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி பெற்று பயனடைந்து வருவது குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் உயர்கல்வித்துறை சார்பில், தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக



எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டு வருகிறது. மேலும், “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில “புதுமைப் பெண்” திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில “தமிழ்ப்புதல்வன்” ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி



சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.02.2025 அன்றுதலைமைச்செயலகத்திலிருந்து, உயர் கல்வித் துறை சார்பில், காணொலிக்காட்சி வாயிலாக, புதுக்கோட்டை மாநகராட்சி, மாட்சிமை தங்கிய மாமன்னர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மின்னணு நூலகக் கட்டடத்தினை திறந்து வைத்தார்.

இந்த புதிய மின்னணு நூலக கட்டடத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்றோர், தற்போது நடைபெறவுள்ள, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி 4 தேர்வு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் சார்பு ஆய்வாளர் பணிக்கான தேர்வு உள்ளிட்ட பல்வேறு அரசு போட்டித் தேர்வுகளுக்கு நிறைந்தது மனம் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்று வருகின்றார்கள்.

எனவே, சிறப்பான முறையில் போட்டித் தேர்விற்கு கல்வி பயில்வதற்கு இத்தகைய சூழ்நிலையினை ஏற்படுத்திக்கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு அரசுப் போட்டி தேர்வுகளுக்கு பயின்று வரும் அனைவரும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

பின்னர், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்காடு கிராமத்தைச் சேர்ந்த அருள்முருகன் தெரிவித்ததாவது; நான் ஆலங்குடி வட்டம், ஆலங்காடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த இரண்டு வருடமாக அரசு போட்டி தேர்விற்கு தயார் செய்து வருகிறேன். போட்டித் தேர்விற்கு படிப்பதற்கான சூழ்நிலை மற்றும் போதிய இடவசதிகள் இல்லாமல் இருந்து வந்த சூழ்நிலையில் மாவட்ட மைய நூலகத்தை பயில்வதற்காக பயன்படுத்தி வந்தேன். இந்த மைய நூலகத்தில் போட்டித் தேர்விற்கு தேவையான புத்தகங்கள், மேலும் அதிகளவிலான பல்வேறு புத்தகங்கள் உள்ளன. இப்புத்தகங்களை பயன்படுத்தி படித்ததில் கடந்த முறை நடைபெற்ற தொகுதி 4 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுள்ளேன். மேலும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தற்பொழுது தயார் செய்து வருகிறேன். இந்த மாவட்ட மைய நூலகத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மின்னணு நூலகமாக மாற்றியமைத்து உள்ளார்கள். இதனால் புத்தகங்களை எளிதில் தேடி போட்டித் தேர்வுகளுக்கு தேவையான குறிப்புகள் எடுக்கும் வகையில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த வசதி எனக்கு மட்டுமல்லாமல் என்னை போன்று போட்டித் தேர்விற்கு தயார் செய்து வருபவர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அடிப்படைக் கல்வி துவங்கி உயர் கல்வி, தொழிநுட்பக் கல்வி, தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு வரை கவனம் செலுத்தி வருகிறார்கள். இத்தகைய சிந்தனையின் தோன்றலாய் போட்டித்தேர்வு ஆர்வலர்களுக்கு போட்டித் தேர்வு பயிற்சிகள், போட்டித் தேர்வுக்கான புத்தகங்கள் எளிதில் கிடைக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட நூலகங்கள், தொலைநோக்கு திட்டமாக டிஜிட்டல் நூலகங்கள் 6T60T இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி, அவர்களின் ஒளியேற்றக் கூடிய உன்னத திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

இத்தகைய வேலைவாய்ப்பு பெறக்கூடிய திட்டங்களை உருவாக்கி தரும், தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

தொகுப்பு:–
பிரேமலதா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை மாவட்டம்

## புதுக்கோட்டையில் அறக்கட்டளை சார்பாக உணவு வழங்கல்




புதுக்கோட்டை கேப்பரையில் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு பகவான் அறக்கட்டளை சார்பாக கேப்பறை பகுதியில் சாலை பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார்கள். தொழிலாளர்களுக்கு சால்வை அணிவித்து இனிப்பு மற்றும் வெஜிடபிள் பிரியாணி வழங்கி கொண்டாடி மகிழ்ந்தார்கள். விழாவில் சிறப்பு அழைப்பாளராக அறந்தாங்கி ஆசிரியர் லோகநாதன், அருள் பிரபு, பட்டதாரி ஆசிரியர், பகவான் அறக்கட்டளை நிர்வாகிகள், பேராசிரியர் சுசிலா தேவி, பாலிரன், கார்த்திகேயன் ஃபாலிரான் கம்பெனி, சரவணன், ஈட்டி தெரு சிவசுப்பிரமணியன், போட்டோ வெள்ளைச்சாமி விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். விழா ஏற்பாடுகளை பகவான் டீ கடை சிவக்குமார் செய்திருந்தார்.


## ஒட்டன்சத்திரத்தில் டெங்கு கொசு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள் சங்க கூட்டம்



**திண்டுக்கல், மே 4–**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தமிழ்நாடு டெங்கு கொசு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஜோதி தலைமையில் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள குழந்தை வேலப்பர் கோவில் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகை தந்த அனைவரையும் மாவட்ட பொருளாளர் காளிமுத்து வரவேற்றார். இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாநிலத் தலைவர் எ. ஜெயவேல் கலந்துகொண்டு சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார். இக்கூட்டத்தில் மாநில துணைச் செயலாளரும் மாவட்ட செயலாளருமான பூமாதேவி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் மாரியப்பன், சசிகுமார், மதியழகன், காவேரி, உள்ளிட்ட தமிழ்நாடு டெங்கு ஒழிப்பு முன்களப் பணியாளர்கள் ஏராளமான கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பணியாளர்களுக்கு உரிய பணி பாதுகாப்பு வழங்க வேண்டும். சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். ஒப்பந்த முறையை கைவிட்டு பணியாளர்களை நிரந்தரபடுத்தி அவுட்சோர்சிங் முறையை விட்டு அரசே ஏற்று நடத்த வேண்டும். ஒட்டன்சத்திரம் ஒன்றியம் கேதையுறும்பு ஆரம்ப சுகாதார நிலையத்தில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை அடிமைபோல் நடத்தி பல மணி நேரம் பணியாற்ற வற்புறுத்துவதை தவிர்க்க வேண்டும். பிற வேலைகளை தவிர்த்து டெங்கு கொசு ஒழிப்பு வேலைகளை மட்டுமே வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# தமிழ் வார விழா: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை பங்கேற்பு

# பயம் என்பது திமுக அகராதியிலேயே கிடையாது–வைகோ பேட்டி



# மருத்துவ படிப்புகளுக்கு இன்று நீட் தேர்வு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 4-5-2025 ஞாயிற்றுக்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்